(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 1(15).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 மே 20 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 யூன் 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2100/2022

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அரிசி இறக்குமதியின் பொருட்டு செலவு செய்யப்பட்ட பணத்தொகை மேலே தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அரிசியை இறக்குமதி செய்த நிறுவனங்களின்/கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அரிசி இறக்குமதியின் போது அறவிடப்பட்ட வரித்தொகை மேலே தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2114/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) சபையில் இன்றளவில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளில் தற்போது அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் மூலமாக ஆரம்பத்திலிருந்து இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் மற்றும் மேற்படி பேருந்துகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் வருமானம் மற்றும் செலவினம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர்,— உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இதற்கு முன்னரான தீர்மானங்களின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 1,000,000,000,000 ஐ விஞ்சாத தொகையொன்றை இலங்கையில் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலம் கடனைப் பெறுவதற்கும், அதன் பொருட்டு (417 ஆவது அத்தியாயம்) உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் தேவையான சகல அதிகாரங்களையும் நிதி அமைச்சருக்கு வழங்குவதற்கும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2022, யூன் 07, செவ்வாய்க்கிழமை)**

3339/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கம் முறையாக கணக்குகளைப் பேணாமை, ஏற்புடைய ஆவணங்களைச் சமர்ப்பிக்காமை மற்றும் நிதி சமநிலையின்மை காணப்படுகின்றமை கணக்காய்வாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காரணத்தினால், மேற்படி சங்கத்தில் ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) திறைசேரியின் செயலாளரினால் இந்த விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற முழுமையான கணக்காய்வு மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட சங்கத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மற்றும் மோசடிகள் காரணமாக மேற்படி சங்கங்கள் மற்றும் அதன் அங்கத்தவர்கள் இழந்துள்ள நிதியைக் கணக்கிட்டு அத் தொகையை மீள் நிரப்புவதற்கு திறைசேரி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(iv) மேற் குறிப்பிட்ட சங்கத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடைய ஆட்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3340/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திறைசேரியின் செயலாளர் பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியதன் காரணமாக அரச உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கம் சீரழிந்து வருகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 1971 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் படி மேற்படி சங்கத்திற்கு சட்டரீதியான செயலாளர் ஒருவரும் கணக்காளர் ஒருவரும் நியமிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) பதவிகளை வெற்றிடமாக வைத்திருக்கும் நோக்கத்தோடு அநாவசியமான தகைமைகளுடன் மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020.06.30 ஆம் திகதியுடன் பதவிக் காலம் முடிவுற்ற சங்கத்தின் நிர்வாக சபையினால் மேற்கொண்டும் நிதி மற்றும் நிர்வாக ரீதியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது சட்ட ரீதியானதல்ல என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) சங்கத்தின் செயலாளருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் 2020.10.16 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின்போது தேர்வு நடத்தப்படும் வரை நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டபோதிலும், அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) தற்போதைய நிர்வாக சபையானது சங்கத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவரை நியமிப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி சங்கத்தின் சீரழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 யூன் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2260/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2456/2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலப்பகுதியில் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்ட புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்படும் இத்தகைய தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2466/2022

கௌரவ றோஹண திஸாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள தேசிய வைத்தியசாலைகள் மற்றும் போதனா வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வைத்தியசாலைகள் அமைந்துள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தளை மாவட்டத்தில் தேசிய வைத்தியசாலையொன்றோ அல்லது போதனா வைத்தியசாலையொன்றோ நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மாத்தளை மாவட்ட வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக்குக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2564/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எனது கோரிக்கைக்கு அமைவாக தோட்டப்புறங்களில் வாழும் மக்களின் சமய, கலாசார, நலனோம்புகை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் அப்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு பதுளை மாவட்டத்தில் தோட்டப்புற பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கி இதற்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததென்பதையும்;

(ii) இதில் 14 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க பணிகளுக்கென 20.5 மில்லியன் ரூபா பதுளை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2568/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விரிவுரையாளரின் பெயர் மற்றும் சேவை நிலையம் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி விரிவுரையாளர்களுக்காக –

(i) அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு;

(ii) அவ்வொதுக்கீட்டில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள நிதி;

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் பயன்படுத்தப்படாத நிதி;

ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2578/2022

கௌரவ பீ.வை. ஜி. ரத்னசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த (சா/த) வரையிலான கல்விச் சீர்திருத்தங்களும் க.பொ.த (உ/த) வரையிலான கல்விச் சீர்திருத்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி ஒவ்வொரு கல்விச் சீர்திருத்தத்தையும் நடைமுறைப் படுத்துவதற்கு தொடங்கும் திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கல்விச் சீர்த்திருத்தத்திற்கும் அமைவாக மேற்கொள்ளப்படும் முக்கியமான திருத்தங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) புதிதாக நிறுவப்பட்ட தேசிய பாடசாலைகள் கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்றனவா அல்லது சம்பந்தப்பட்ட மாகாண சபையினால் நிர்வகிக்கப்படுகின்றனவா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2633/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் சமையல் எரிவாயு தொடர்பில் சமூக உரையாடலொன்று உருவாகியுள்ளமையை அறிவாரா;

(ii) 2020 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இலங்கைச் சந்தைக்கு சமையல் எரிவாயுவை வழங்கும் கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி கம்பனிகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியினதும் சந்தைப் பங்கு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனிகளால் வழங்கப்படும் எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை என்பதை அறிவாரா;

(ii) எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அந்நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iii) எரிவாயுவின் தரத்தைப் பேணிவருவதற்காக மேற்படி நிறுவனங்களை வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2650/2022

கௌரவ ரஊப் ஹகீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியாண்டு 2016 - 2018 தொகுதியைச் சேர்ந்த தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரிகளுக்கு 2021 சனவரி மாதம் 18 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(ஆ) தரத்திற்கான நியமனங்கள் வழங்கப்படுகையில், இஸ்லாம் சமய பாடத்தைக் கற்பிப்பதற்காக நியமனங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நியமனம் பெற்ற ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் இணைக்கப்பட்ட பாடசாலை என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 யூன் 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2653/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடன் பெற்றுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி கூட்டுத்தாபனத்தின் கடன்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கூட்டுத்தாபனம் அரச நிறுவனங்களுக்கு வழங்கியுள்ள எரிபொருளுக்கான பணம் அறவிடப்படவுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் அறவிடப்பட வேண்டிய பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை நிதி ரீதியாக வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2688/2022

கௌரவ ஜே. சீ. அலவத்துவல,— பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிராமிய மக்களுடைய போக்குவரத்து வசதிகளை விரிவாக்கும் நோக்கத்துடன், அப்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கிராமிய மட்டத்தில் பாலங்களை அமைக்கும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு கடந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு பாலக் கருத்திட்டத்தின் பெயர், உரிய பிரதேச செயலகப் பிரிவு, மதிப்பீட்டுத் தொகை, வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் தற்போதைய முன்னேற்றம் என்பன யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் குருநாகல் மாவட்டத்தில் பாலங்களை நிர்மாணிக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப் பட்டிருப்பின், அந்த ஒவ்வொரு பாலக் கருத்திட்டத்தின் பெயர், உரிய பிரதேச செயலகப் பிரிவு, மதிப்பீட்டுத் தொகை மற்றும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி என்பன யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2749/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இலங்கை மகாவலி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட கிவுல் ஓயா கருத்திட்டத்திற்கு வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காக வெட்டி துப்பரவாக்கப்படவுள்ள வனப்பகுதியின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவாகும் மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தொகை, உள்நாட்டு நிதி மூலம் ஒதுக்கப்பட்டதா என்பதையும்;

(v) இன்றேல், அது வெளிநாட்டு உதவியா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுதல் தொடர்பாக பிரதேசத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவிக்காத பட்சத்தில், அதனை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2767/2022

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுமதியின்றி அரச காணிகளைச் சுவீகரித்து அபிவிருத்தி செய்துள்ள ஆட்களுக்கு, சட்ட ஆவணங்கள் வழங்கப்படுவதை துரிதப்படுத்தும் பொருட்டு 2020.09.10 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2192/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையானது, அதையடுத்த 12 நாட்களுக்குப் பின்னர் அதாவது, 2020.09.22 ஆம் திகதிய 2194/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இரத்துச்செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020.09.10 ஆம் திகதிய 2192/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய கிடைத்துள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(ii) அத்தகைய விண்ணப்பப் படிவங்களில் ஆராயப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2020.09.10 தொடக்கம் 2020.09.22 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள உறுதிகள், உரிமப் பத்திரங்கள் மற்றும் பிற சட்ட ஆவணங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு உறுதிகள், உரிமப் பத்திரங்கள் மற்றும் பிற சட்ட ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு பயனாளியினதும் பெயர், முகவரி மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு தனித் தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2768/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் வருமானப் பரிசோதகர் பதவிக்கென ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்;

(ii) அத்தகைய ஒவ்வொரு வழிமுறைக்கென தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகள் தனித்தனியாகவும்;

(iii) 2015 ஆம் ஆண்டின் பின்னர், 06/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய மேல் மாகாணத்தின் உள்ளூரதிகார சபைகளில் வருமானப் பரிசோதகர் பதவிக்கென ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட வழிமுறை;

(iv) அதற்கென தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகள்;

யாவை என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 06/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைய, 2004 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வருமானப் பரிசோதகர்களின் சம்பளங்களில் குறைப்பு ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2770/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (சார்க்-SAARC) கொழும்பு சமவாயம் மற்றும் 16 ஆவது மாநாட்டு அமர்வின் பிரகாரம் 8000 மெ.தொ. விசேட அரிசி இருப்பு ஒன்றும் 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 100,000 மெ.தொ. அரிசி காப்பு இருப்பு ஒன்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் பேணப்பட வேண்டுமென்ற போதிலும், 2020 ஆம் ஆண்டில் உணவு ஆணையாளர் திணைக்களம் அரிசி இருப்புகள் எதனையும் பேணவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரிசி இருப்புகள் பேணிவரப்பட்டிருப்பின், தனியார் துறையின் அரிசிக்கான ஏகபோக உரிமையைத் தகர்த்து அரிசிக்கென சமநிலையான விலையொன்றைப் பேண முடிந்திருக்கும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்குறிப்பிட்ட இருப்புகளுக்கென அரிசிக் கையிருப்பைப் பேணுவதற்குத் தயாரிக்கப்படவுள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2783/2022

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகள் இதுவரையில் நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) 2019.03.07ஆம் திகதி அதன் உள்ளக விளையாட்டரங்கும் நீச்சல் தடாகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இதுவரை அவை பாவனைக்காக அளிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பொது விளையாட்டு மைதானத்தை —

(i) நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(ii) நிர்மாணிப்பதற்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iii) நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரர்கள் பற்றிய விபரங்கள் யாவை;

(iv) நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்யும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை வழிமுறை பின்பற்றப்படாவிட்டால், அதற்கான காரணம் யாது;

(v) நிர்மாணத்திற்காக மரப் பலகைகளுக்குப் பதிலாக இறப்பர் கம்பளம் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கான காரணம் யாது;

(vi) நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்து பயன்பாட்டுக்காக அளிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(ii) அந்த நிர்மாணத்திற்காக குறித்த காணி உரிமையாளர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணம் யாது என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்ற பின்னர் அந்த விளையாட்டு மைதானம் யாரால் நிர்வகிக்கப்படும் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2837/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் —

(i) வதியும் வீட்டு தேவையுடைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தனியார் காணிகளில் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மாதிரிக் கிராமங்களாக அமைக்கப்படுகின்ற வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2971/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாத்தண்டிய, இரணவில கிராமத்தில் வாழ்கின்ற மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்கிராம மக்கள் பயன்படுத்தும் மீன்பிடிப் படகுத்துறை இன்றளவில் கடுமையாக கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இக்கிராமத்தவர்கள் எதிர்நோக்கியுள்ள இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3077/2021

கௌரவ அசோக்க பிரியந்த,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழுள்ள சகல நிறுவனங்களிலும் தற்போது ஒப்பந்த மற்றும் அமய அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2022 யூன் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அதிவேக நெடுஞ்சாலைகள் கருத்திட்டங்களுக்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளை முகாமைத்துவம் செய்யும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) அக்காணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக கம்பெனியொன்றினை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கம்பெனி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இல்லையெனில், அக்கம்பெனி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட கம்பெனிக்கு யாரால் காணிகள் சாட்டப்படுகின்றன என்பதையும்;

(vi) அக்காணிகளைச் சாட்டுவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

40/2022

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கம், வெள்ளி மற்றும் இரும்பு சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்கின்ற கைத்தொழிலாளர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசங்கள் தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பிரதேசங்கள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கின்ற மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களில் பாரம்பரியமாக ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பிரச்சினைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின், அது எவ்வாறென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இடையீடு செய்யப்பட்டிருப்பின், அது எவ்வாறென்பதையும்;

(v) இவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்களின் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நாடுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் மேற் குறிப்பிட்ட பொருட்களின் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

256/2022

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு உறுப்பினர்களினதும் பெயர், முகவரி மற்றும் இவர்களுக்குச் சொந்தமான பவுசர் வாகனத்தின் இலக்கம் என்பவை தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள் விலையேற்றத்திற்கு அமைவாக போக்குவரத்துக் கட்டணங்கள் திருத்தப்படாமையால் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

576/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு விவசாய தரவுக்களஞ்சியம் ஒன்றினை நிறுவுவது மிகவும் முக்கியமானது என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கமத்தொழில் அமைச்சினால் விவசாய தரவுக்களஞ்சியத்தினை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதற்கென இது வரையில் செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) விவசாய தரவுக்களஞ்சியத்தை நிறுவுகையில் யாதேனும் மோசடி இடம்பெற்றிருப்பின், அது தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1029/2022

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் யானை - மனித மோதல் காரணமாக உயிர் இழப்புகளும் சொத்துக்களுக்கான சேதங்களும் ஏற்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ள ஆட்களின் மரண எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக இடம்பெறுகின்ற ஆளொருவரின் மரணத்திற்காக தற்போது செலுத்தப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை யாது என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டில் காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக இடம்பெற்றுள்ள சொத்துக்களுக்கான சேதங்களுக்கென செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத்தொகை யாது என்பதையும்;

(iv) காட்டு யானைகளின் தாக்குதல்களிலிருந்து மக்களை விடுவித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3086/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை நகரையும் கல்லோயா குடியிருப்பையும் இணைக்கும் கிட்டங்கி ஆற்றின் குறுக்காக அமைந்துள்ள பிரதான வீதி பருவ மழைகாலத்தில் ஐந்து அடிகளுக்கு மேல் நீரில் மூழ்குவதன் காரணமாக அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி வீதியினூடாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு பெருமளவிலான மக்கள் பயணிக்கின்றனர் என்பதையும்;

(iii) கிட்டங்கி ஆற்றின் குறுக்காக பாலமொன்று நிர்மாணிக்கப்படாததன் காரணமாக அவ் வீதியை பயன்படுத்தியபோது விபத்துக்களுக்கு உள்ளானதன் விளைவாக பலர் மரணித்துள்ளதோடு சொத்துக்களும் அழிவடைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் கிட்டங்கி ஆற்றின் குறுக்கே இதுவரை பாலமொன்று நிர்மாணிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பாலம் நிர்மாணிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3156/2022

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு 200 புலனாய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(ii) 2018.10.27 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு சுமார் 10,000 விண்ணப்பதாரிகள் தோற்றியதாகவும்;

(iii) ஒரு விண்ணப்பதாரியிடமிருந்து பரீட்சைக் கட்டணமாக ரூ. 750 அறவிடப்பட்டது என்பதையும்;

(iv) பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 408 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்;

(v) நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 விண்ணப்பதாரிகளின் பாதுகாப்புத் தடைநீக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள போதிலும் இது வரையில் அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதையும்;

(vi) மேற்குறித்த ஆட்சேர்ப்புச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு தற்போது 2 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ளதுடன் ஆட்சேர்ப்புத் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1½ வருடங்கள் கழிந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறித்த புலனாய்வு உத்தியோகத்தர்கள் விரைவில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3157/2022

கௌரவ உதயன கிரிந்திகொட,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு மத்தியில் இரட்டைப் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இலங்கையரொருவர் வெளிநாட்டுப் பிரசாவுரிமையைப் பெறுகையில் இலங்கை அரசாங்கத்தை விழிப்பூட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வெளிநாட்டுப் பிரசாவுரிமையை மாத்திரம் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 1989 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3174/2021

கௌரவ திலிப் வெதஆரச்சி,— வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையானது பன்னிரண்டு உறுப்பினர்களை உள்ளடக்கிய போதிலும், இச்சங்கத்தின் அதிகாரத்தை பணிப்பாளர் சபையின் மூன்று உறுப்பினர்கள் பலவந்தமாக கைப்பற்றியுள்ளரென்பதையும்;

(ii) தங்காலை பிரதேச செயலகத்தில் இணைந்து கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் இதில் தொடர்புபட்டிருக்கின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் (தென் மாகாணம்) இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பணத்திற்கு பொறுப்புக்கூறும் தரப்பினர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3189/2022

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் மொத்த விஸ்தீரணத்தையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்களையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழுகின்ற மக்களுக்கு மத்தியில் தற்போதைய அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் மொத்த விஸ்தீரணத்தையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள இடங்களையும்;

(iii) மேற்படி காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதற்கான நோக்கங்களையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) (i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகள் பலவந்தமாக கையகப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளையும்;

(iii) ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளை பகிர்ந்தளிப்பதற்காக புதிய முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், மேற்படி முறைமையின் விபரங்களையும்;

அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா .47/2022

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2022

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2022

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா, 50/2022

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா, 51/2022

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா, 52/2022

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.53/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையை நிறுவுதல்,— அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவாறும் கிராமிய மக்களுக்கு நெருக்கமாகப் பணியாற்றியவாறும் அளப்பரிய சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்காக யாப்பொன்றைத் தயாரித்து "இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவை"யாக அதனை நிறுவுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.54/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— உரித்துடையவர்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குதல்,— சமுர்த்தி பயனாளிகள் மற்றும் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெறாத குறைந்த வருமானம் பெறும் மக்கள் தொடர்பில் முறையான ஆய்வினை மேற்கொண்டு, உண்மையாகவே சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெற வேண்டியவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு இதனை வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.55/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல்,— கல்வியியற் கல்லூரிகளில் முறையான ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கியவாறு பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.56/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக பசுமாடு ஒன்றினை வழங்குதல்,— கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்திற்குப் பதிலாக ஒரு பசுமாடு வீதம் வழங்கி அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— ஏற்றுமதியின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு விவசாய நாடு என்ற ரீதியில் விவசாயிகளுக்குத் தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் வழங்கி இறக்குமதிக்குப் பதிலாக ஏற்றுமதி ஊடாக பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.58/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்கென நிலையான தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல்,— இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை அதிபர் சேவை உட்பட கல்வித் துறையின் பதவிகளுக்கான நிலையான இடமாற்றக் கொள்கையொன்று இன்றளவில் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சிடம் உள்ள போதிலும், இலங்கை கல்வி நிருவாக சேவைக்காக இதுவரையில் தேசிய இடமாற்றக் கொள்கையொன்று உருவாக்கப்படாத காரணத்தினால் மேற்படி அலுவலர்கள் விரக்திக்கு ஆளாகியுள்ளதாலும், மேற்படி நிலைமையினைத் தவிர்ப்பதற்காக இலங்கை கல்வி நிருவாக சேவையின் அலுவலர்களுக்காகவும் தேசிய இடமாற்றக் கொள்கையொன்றினைத் தயாரித்தல் மட்டுமன்றி ஆசிரியர்/அதிபர் இடமாற்ற தேசியக் கொள்கையினைச் செயற்படுத்துவதற்காகவும் அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.59/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழி முட்டை சார்ந்த கைத்தொழிலை மேம்படுத்தல்,— இன்றளவில் கோழித் தீவனத்தின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதன் காரணமாக கோழி முட்டை சார்ந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் சிக்கல் நிலையை எதிர்கொண்டுள்ளதால் இந்த நிலைமையினைத் தவிர்த்து கோழி முட்டை சார்ந்த கைத்தொழிலை மீளவும் மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அவசியமான நடவடிக்கைகளை துரிதமாக மெற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.